# “மானமிகு ஆசிரியர்” நீடு வாழ்க!



"முடியும்வரை கடமைகளைச் செய்வேன்!"
என்றே
முழுவீச்சில் இறங்குகின்றார்! மூச்சு நின்று
"மடியும்வரை ஓய்வில்லை பணியில்!" என்றே
மானமிகு ஆசிரியர் முழங்கு கின்றார்!
"இடியும்வரை, ஆதிக்கத் தடைச்சு வர்கள்
இல்லாமல் போகும்வரை, எனது தாய்மண்
விடியும்வரை என்தொண்டு தொடரும்!" என்றே
விடுத்தார்!போர்ப் பிரகடன அறிக்கை நன்றே!

போகிறது காலநதி புதுவே கத்தில்!
பொறுப்பேற்றுக் கருஞ்சட்டைப் படைந டத்தி
ஆகிறது மூத்தமுதிர் வயதென் றாலும்
அழகுகுன்றா இளமையுடன் சுழலு கின்றார்!
சாகிறது சனாதனநோய்க் கிருமி யெல்லாம்!
சமர்புரியும் "ஆசிரியர்" சக்தி கண்டே
வேகிறது வெறிப்பகைவர் நெஞ்ச மெல்லாம்!
"வீரமணி" ஒலிக்கிறதே தமிழ்நா டெங்கும்!

நெற்றிக்கண் பழமைகளை ஞானக் கண்ணின்
நெருப்பாலே சுட்டெரித்தார் பெரியார்! அந்த
வற்றாத பகுத்தறிவுக் கனலை ஏந்தி
வலம்வரும்நம் "ஆசிரியர்" எட்டுத் திக்கும்
சுற்றித்தன் பரப்புரையை நிகழ்த்து கின்றார்!
சுயமரியா தைப்பயணம் நடத்து கின்றார்!
வெற்றிக்கு மறுதொடக்கம்! சமூக நீதி
விடுதலைக்குப் பூபாளம் அவர்மு ழக்கம்!

வளமார்ந்த கருத்துக்கள்! தெளிந்த சொற்கள்!
வாதத்தில் அனல்கக்கும் ஆதா ரங்கள்!
உளமார்ந்த கொள்கையைஉள் வாங்கிக்
கொண்டே
உலாவரும் "தாடியில்லாப் பெரியார்" இன்றும்
களமாடி வருகின்றார் உரிமைப் போரில்!
கலைஞர்வழி நடைபோடும் நல்லாட் சிக்கோர்
இளம்வீரன் தினவைப்போல் தோள்கொ டுத்தே
"இனமானத் தளபதி"க்குத் துணைநிற் கின்றார்!

பட்டுமலர் விரிப்பல்ல! கடந்து வந்த
பாதையெங்கும் விஷமுட்கள்! வசைக்கூச் சல்கள்!
அட்டணக்கால் இருக்கைதரும் வரவேற் பல்ல!
அழுகியவீண் முட்டையுடன் அமில வீச்சு!
விட்டொதுங்கிப் போகவில்லை எதிர்ப்பைக்
கண்டே!
"வெண்தாடிச் சூரியனின்" படையில், உச்சம்
தொட்டு,அகவைத் "தொண்ணூற்றி இரண்டும்"
தொட்டார்!
" தொண்டுசெய்து பழுத்தபழம்" இவரும் ஆனார்!

எண்ணத்தை நிறைவேற்றிப் பெரியார் கண்ட
இயக்கத்தின் வழிகாட்டி அரைநூற் றாண்டாய்!
விண்முட்ட இனமானம் எதிரொ லிக்கும்
"விடுதலைக்கே" ஆசிரியர் அறுப தாண்டாய்!
கண்மூடி வழக்கத்தைத் தகர்த்துப் போடும்
கருத்தியற் கோட்பாட்டில் எண்ப தாண்டாய்!
நுண்ணோக்கும் அறிவாளர்! தொண்ணூ
றென்ன?
நூறாண்டும் இவர்திகழ்வார் இளைஞ ராக!

கடலூரி லேபிறந்து, தமிழி னத்தின்
காவலராய் "திடலூரில்" எழுந்த கோமான்!
உடலேற்றுக் கொள்ளாத மூப்பென் றாலும்
ஓய்வுக்கே ஓய்வுதரும் உழைப்புச் செம்மல்!
அடலேறு சலியாத வினைத்திட் பத்தில்!
அஞ்சாத சினவேங்கை அறச்சீற் றத்தில்!
வடலூரின் அடுப்பைப்போல் சுடர்குன் றாமல்
வளர்ந்துவரும் கொள்கைத்தீ! வாழ்க! வாழ்க!

பாழடைந்த தமிழ்நாட்டைப் புதுப்பிக் கின்ற
பணியில்நம் "முதல்வருடன்" கைகள் கோர்த்துத்
தோழமையின் ஆளுமையை வழங்கி வாழ்க!
துள்ளலுடன் துடிப்புடனே இயங்கி வாழ்க!
வாழ்க!எங்கள் "ஆசிரியர்" நீடு வாழ்க!
வருங்காலப் பொன்னேட்டு வரலாற் றுக்குத்
தாழ்திறந்த பெருமகனார் இனிது வாழ்க!
தாய்க்கழகப் பெருமையுடன் தமிழ்போல் வாழ்க!!

கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்**



# திருச்செங்கோடு நகராட்சி பணியாளர்களுக்கு உணவு!

## நகர மன்றத் தலைவர் வழங்கினார்!

நாமக்கல், டிச. 2–

நாமக்கல் மேற்கு மாவட்டம் திருச்செங்கோட்டில் தமிழ்நாடு துணை முதல்வர் தி.மு.க. கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் ஆலோசனையின்படி, திருச்செங்கோடு நகராட்சியில் பணிபுரியும் 300 க்கும் மேற்பட்ட அனைத்து பணியாளர்களுக்கும் நகர மன்ற தலைவர் நளினி சுரேஷ்பாபு பிரியாணி உணவு வழங்கி, அவர்களுடன் அமர்ந்து மதிய உணவு அருந்தினார்.

தொடர்ந்து புதிய பேருந்து நிலையம் பேருந்து நிலைய ஆட்டோ ஸ்டாண்ட் பகுதிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.நடேசன், நகர் மன்ற தலைவர் நளினி சுரேஷ் பாபு ஆகியோர் தலைமையில் பட்டாசு வெடித்து இனிப்புகள் வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் நகர மன்ற உறுப்பினர்கள் மாதேஸ்வரன், செல்வி, ராஜவேல் புவனேஸ்வரி, உலகநாதன், திவ்யா வெங்கடேஸ்வரன், தாமரைச்செல்வி மணிகண்டன், ரமேஷ், சினேகா ஹரிகரன், செல்லம்மாள் தேவராஜன், சுரேஷ்குமார் மற்றும் நகர கழக நிர்வாகிகள் கணபதி, ராஜவேல், பெருமாள், சுரேஷ்குமார், தூய்மை பணியாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இன்று

# திராவிடர் கழகத் தலைவர் - ஆசிரியர் கி.வீரமணி 92வது பிறந்த நாள்!



**திராவிடர் கழகத் தலைவர் - ஆசிரியர் கி.வீரமணி அவர்களுக்கு, இன்று (02.12.2024 - திங்கள் கிழமை) 92 வது பிறந்த நாளாகும்!**

## கேரள மாநிலம் – வைக்கம் பகுதியில் – ரூ.8.14 கோடி மதிப்பில்

# தந்தை பெரியார் நினைவகம் - நூலகக் கட்டிட இறுதிக் கட்டப் பணிகள்!

## தமிழ் வளர்ச்சி – செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

வைக்கம், டிச. 02 -

கேரளா மாநிலம், வைக்கத்தில் தந்தை பெரியார் நினைவகத்தில் தமிழ்நாடு அரசின் சார்பில் ரூ.8.14கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டு வரும் நினைவகம் மற்றும் நூலக கட்டிட இறுதி கட்டப் பணிகளை நேற்று முன்தினம் (30.11.2024) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வைக்கம் நகராட்சி தலைவர் திருமதி. பிரிதா ராஜேஷ், துணை தலைவர் சுபாஷ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இணை இயக்குநர் (நினைவகம்) கு.தமிழ்செல்வராஜன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர்கள் செல்வராஜு, மணியரசு (மின்), தமிழ்நாடு அரசின் கேரள மாநில தொடர்பு அலுவலர் ஆர்.உண்ணிகிருஷ்ணன், கோயம்புத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஆ. செந்தில் அண்ணா, உதவி செயற்பொறியாளர்கள் மோகனகிருஷ்ணன், கனகராஜ், உதவி பொறியாளர் ஜெயம்கொண்டான் ஆகியோர் உடனிருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் கேரள மாநிலம் வைக்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்க வும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்கள் கூடுதலாக இடம் பெறுவதற்கும் ரூ.8.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவித்தார்கள். அதன்படி, கேரள மாநிலம் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில், வைக்கம் வீரர் தந்தை பெரியார் நினைவிடத்தை மேம்படுத்துதல் மற்றும் புதுப்பித்தல், ரூ.8.14/- கோடி கட்டுமான பணிக்கான நிர்வாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் வழங்கப் பட்டது.

நினைவக அருங்காட்சியகம் 175.70 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தளம் விரிவாக்கம் செய்தல், ஏற்கனவே உள்ள பழைய நூலக கட்டடத்தினை இடித்து விட்டு அவ்விடத்தில் புதிய நூலக கட்டடம் அமைத்தல், தரை தளத்தில் 120 சதுர மீட்டர் பரப்பளவில் நூலகம் மற்றும் முதல் தளத்தில் 120 சதுர மீட்டர் பரப்பளவில் தங்கும் அறை என மொத்தம் 240 சதுர மீட்டர் பரப்பளவில் தரை மற்றும் முதல் தள கட்டடமாக அமைத்தல், சிறுவர் பூங்கா மறுசீரமைப்பு செய்தல், திறந்த வெளி அரங்கத்தில் (Amphi Theatre) சீரமைப்புப் பணிகள் செய்தல், ஏற்கனவே உள்ள சுற்றுப்புறச் சுவரினை பழமை மாறாமல் புதுப்பித்து, முன்புற முகப்பு நுழைவு வளைவு (Entrance Arch) அமைத்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அருங்காட்சியக கட்டிடத்தில் தந்தை பெரியாரின் வாழ்க்கை புகைப் படங்கள் இடம் பெற உள்ளது. சுமார் மூன்றாயிரம் (3000 Nos) புத்தகங்கள் கொண்டு பெரியார் நூலகம் அமையப் பெற உள்ளது.

அதனைத்தொடர்ந்து, நினைவகம் மற்றும் நூலக கட்டட இறுதிக்கட்ட பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி முன்னாள் அமைப்பாளர்

# கோ.மோகன் குமார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



கோவை, டிச. 2 -

கோவை மாநகர் மாவட்டம் 69வது வட்ட அவைத்தலைவர் முன்னாள் 34வது வார்டு மாமன்ற உறுப்பினர் முன்னாள் கோவை மாநகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளருமான கோ.மோகன்குமார் அவர்கள் உடல்நலக் குறைவால் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைவு செய்தி அறிந்து கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை அன்னாரது குடும்பத்தாருக்கு தெரிவித்துள்ளார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்!

# நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் 15 குழந்தைகளுக்கு மோதிரம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் வழங்கினார்!

நெல்லை, டிச. 2 -

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்தநாளை முன்னிட்டு

27.11.2024 அன்று நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 15 குழந்தைகளுக்கு தங்க மோதிரங்கள் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் வழங்கினார்.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் தொடர் 65 நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி 3வது நிகழ்ச்சியாக கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளன்று நெல்லை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த 15 குழந்தைகளுக்கு மகப்பேறு மருத்துவமனை வளாகத்தில் மாநகர மாணவரணி வினோத் குமார் ஏற்பாட்டில் பாளை பகுதி செயலாளர் அன்டன் செல்லத்துரை தலைமையில்,மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் கோபி,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை,மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் அலிஃப் மீரான், இனியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் மாநகர செயலாளர் சு.சுப்பிர மணியன் பங்கேற்று தங்க மோதிரங்கள் வழங்கினார்.

நிகழ்வில் வைரமணி, மாவட்டப் பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுரேஷ் குமார்,

வட்ட செயலாளர்கள் பேபி கோபால், கேபிள் குமரேசன், சடாமுனி, ராபர்ட் செல்லையா, கிங் பாலா, கதிரேசன், மாநகர நிர்வாகிகள் அவதார் ஷாஜகான், ஸ்டார் முருகன், சிவா,பீர் மஸ்தான், வழக்கறிஞர் அருள் மாணிக்கம்,நச்சினார் இனியன், எஸ்.எஸ். முத்து, சித்திக், சார்லஸ் முத்து ராஜ்,செந்தில் குமார், சிவகுமார், முருகன்,சௌந்திரம் முத்து ராஜ்,பத்மா,பிந்து செய்யது, ராஜேஸ்வரி,ஆனிராக்லேண்ட்,சித்ரா பௌர்ணமி,முத்து சுப்பிரமணியன், ஹாமிம் முஸ்தபா, வினோத்,சங்கர நாராயணன்,மஸ்தான்,உமர், உசைனி,சங்கர்,சங்கர நாராயணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தைச் சேர்ந்த அ.தி.மு.க., தே.மு.தி.க., பா.ஜ.க., அ.ம.மு.க., நாம்தமிழர் கட்சியைச் சேர்ந்த 5 ஆயிரம் பேர் பா.ஜ.க. தொழில்பிரிவு மாவட்டச் செயலாளர் பி. பிரபாகரன் தலைமையில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். இதில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் ஐ.பி. செந்தில்குமார், மாவட்ட அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச் செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், பொருளாளர் சத்தியமூர்த்தி, வடக்கு ஒன்றியச் செயலாளர் மணி, திண்டுக்கல் ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, மாநகர செயலாளர் ராஜப்பா உட்பட திமுக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## பி.என். பெரியண்ணன்

**டிசம்பர் 1 (2009)**



**தருமபுரி ஒருங்கிணைந்த மாவட்டக் கழகச் செயலாளராகவும், பின்னர் தருமபுரி வடக்கு மாவட்டக் கழகச் செயலாளராகவும் பணியாற்றியவர்.**

**பென்னாகரம் ஒன்றிய கவுன்சிலர், பென்னாகரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளில் திறம்படச் செயலாற்றியவர்.**

**“அடக்கமும், அமைதியும் வாய்ந்தவர். எதற்கும் அதிர்ந்து பேசமாட்டார். கழகத் தோழர்களிடம் அன்பாகப் பழகி அனைவரையும் கட்டுக்கோப்பாக வைத்திருந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**